# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

வியாழக்கிழமை 12.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


## யாழில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்ல முடியாது



யாழ்ப்பாணத்தில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்ல முடியாது. அவர்களது பிரிவினைவாத கருத்துக்களைப் பின்பற்றினால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள உள்ளக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அம்பாறை - திருக்கோவில் பிரதேசத்தில் புதன்கிழமை (11) இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியல் என்பது மக்களின் ஆணையூடாக ஆணையைப் பிடிப்பதாகும். இலங்கையில் நிறைவேற்றுத்துறையின் அதிகாரம் என்பது சிறுபான்மை மக்களுக்கு இன்றியமைதா ஒன்றாகும். அந்த வகையில் கிழக்கு மக்களின் முழு நம்பிக்கையையும் வென்ற

02 ஆம் பக்கத்தில்...

## நாட்டு மக்கள் வீழ்ந்துள்ள இடத்திலிருந்து மீட்டெடுப்பதே எனது எதிர்பார்ப்பு



தற்போதைய ஜனாதிபதி பொருளாதாரத்தை சுருக்கி மக்களின் மீது சுமையை அதிகரித்து மக்களை அழுத்தத்திற்கு உட்படுத்துகின்ற கொள்கை திட்டமொன்றை பின்பற்றுகின்றார். அத்தோடு தன்னை தோல்வியடையச் செய்து அநுரகுமாரவை வெற்றியடைய செய்வதற்கு அநுர குமார திசாநாயக்க உடன் வித்தியாசமான கூட்டமைப்பு ஒன்றையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளார். எனவே ஜனாதிபதி தேர்தலில்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் பொது வேட்பாளர் பிரச்சார நடவடிக்கையில் அடிக்கடி இடையூறு

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு அம்பாறை மாவட்டத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் இம்முறை போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

02 ஆம் பக்கத்தில்...



## காணாமல் போன ஜனாதிபதி வேட்பாளர்கள்

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு கட்டுப்பணம் செலுத்திய 19 வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெப்ரல் (PAFFREL) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து விசேட ஆய்வொன்றை

02 ஆம் பக்கத்தில்...




# புதிய வளத்தாப்பிட்டியில் சஜித்தின் தேர்தல் அலுவலகம் திறந்து வைப்பு









**( வி.ரி.சகாதேவராஜா)**

2024.ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் பிரச்சார அலுவலகம் அம்பாறை புதிய வளத்தாபிட்டியில் நேற்று மிகவும் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளர் வெ. வினோகாந்த் தலைமையில் திறந்து வைக்கப்பட்ட இவ் வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை நகர சபை, பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள் உட்பட புதிய வளத்தாபிட்டி, பழைய வளத்தாபிட்டி பளவெளி க மல்வத்தை போன்ற கிராமங்களைச் சேர்ந்த சஜித் பிரேமதாச எதிர்கால ஜனாதிபதி அவர்களுடைய ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

# பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள யாழ்ப்பாணத்தில் சஜித்தின் மனைவிக்கு இராணுவ மரியாதை







ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், வாக்குகளை வசப்படுத்துவதில் தென்னிலங்கை பிரதான வேட்பாளர்கள் தீவிரம் காட்டியுள்ளனர்.

வடக்கு கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் தமிழர்களின் வாக்குகளை குறிவைத்து சிங்கள வேட்பாளர்கள் தீவிர் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பிரச்சாரத்தின் போது பேசப்படும் விடயங்களும், செயற்பாடுகளும் அவ்வப்போது பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதை கடந்த காலங்களில் அவதானிக்க முடிந்துள்ளது.

அந்த வகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் மனைவி, ஜலனி பிரேமாச யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ள நிலையில், பலாலி விமான நிலையத்தில் அவருக்கு இராணுவ மரியாதை வழங்கப்பட்டமை சர்ச்சையை உண்டுபண்ணியுள்ளது.

தற்போதைய இராணுவ மரியாதை செலுத்தும் முறைக்கமைய, துப்பாக்கி செங்குத்தாக உடலுக்கு ஏற்ப உயர்த்தப்பட்டு பொதுவாக தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுகின்றது.

எனினும், இந்த இரு பிரிவிலும் உள்ளடங்காத ஜலனி பிரேமாசவிற்கு இராணுவ மரியாதை வழங்கியுள்ளமை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், ஜலனி பிரேமாசவுடன் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸுக்காகவே இந்த இராணுவ மரியாதை நிகழ்த்தப்பட்டதாகவும் வேறு எந்த நபருக்கும் அல்ல என விமானப்படையின் பேச்சாளர் குரூப் கெப்டன் எரந்த கீகனகே தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த குழுவிற்கு ஜலனி பிரேமதாச தலைமை தாங்கினார் என்பதும் அவருக்குப் பின்னால் ஜி.எல். பீரிஸ் நடந்து செல்வதைக் காண முடிந்துள்ளது.

மேலும், பின்னர் பலாலி முகாமில் பிரதம அதிதியாக ஜலனி பிரேமதாச கலந்து கொண்டதுடன், சால்வை போர்த்தப்பட்டு வரவேற்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தபால் மூல இறுதி வாக்களிப்பு: இதுவே கடைசி சந்தர்ப்பம்

**ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல இறுதி வாக்களிப்பு நேற்றும் (11) இன்றும் (12) இடம்பெறவுள்ளதாக என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

**தபால் மூலம் வாக்களிப்பதற்காக கடந்த 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியாத அனைத்து அரசு ஊழியர்களும் இந்த இரண்டு நாட்களிலும் தபால் மூலம் வாக்களிக்கலாம் என ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.**

**இந்த இரண்டு தினங்களில் தபால் மூல வாக்குகளைப் அடையாளப்படுத்தாவிட்டால் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் செப்டம்பர் 21ஆம் திகதி அல்லது வேறு எந்த நாளிலோ வாக்குகளை அளிக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

**அதன்படி இன்று தபால்மூல வாக்களிப்பை பயன்படுத்தும் வாக்காளர்கள் தமது பணியிடங்கள் அமைந்துள்ள மாவட்டத்தில் உள்ள மாவட்ட தேர்தல் அலுவலகம் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சென்று வாக்களிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.**

## காணாமல் போன ஜனாதிபதி வேட்பாளர்கள்

ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில வேட்பாளர்கள் கட்சி அலுவலகம் கூட கட்டவில்லை எனவும், பத்து வேட்பாளர்கள் மாத்திரமே தமது கொள்கைகளை முன்வைக்க நேரத்தை எடுத்துக் கொண்டுள்ளதாகவும் ரோஹன ஹெட்டியாராச்சி சுட்டிக் காட்டியுள்ளார். இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டிய 38 வேட்பாளர்கள் முன்வந்துள்ளதாகவும், இது வரலாற்றில் அதிகூடிய வேட்பாளர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், அவர்களில் 10 பேர் மாத்திரமே தற்போது பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் பொது வேட்பாளர் பிரச்சார நடவடிக்கையில் அடிக்கடி இடையூறு

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு நமக்காக நாம் எனும் தொனிப்பொருளில் தேர்தல் பிரசாரத்தை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்திருந்தார்.

அவருடன் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா. நடராஜா உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.

முதலில் அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள பெரிய நீலாவணையில் அரியநேத்திரனுக்குப் வரவேற்பளிக்கப்பட்டது.

தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.

ஏனைய தாயக செயலணி உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். அங்கே முருகன் கோயிலில் சிறப்பு பூஜை இடம்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளிலும் தமிழ்ப் பொது வேட்பாளருக்குப் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது. இது தவிர தனது பிரச்சாரத்தை முன்னெடுத்த சந்தரப்பத்தில் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் அவருடன் முரண்பட்டதனை அவதானிக்க முடிந்தது.

தனது பிரச்சாரத்தை பெரியநீலாவனை முருகன் கோயில் முன்றலில் இருந்து ஆரம்பித்த வேளை பூஜையில் ஈடுபட்டார்.

பின்னர் மற்றுமொரு பிரச்சார நடவடிக்கைக்காக செல்வதற்கு தயாராகி கொண்டிருக்கும் போது அங்கு வந்த பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் விசேட அதிரடிப்படையினரின் இடையூறினால் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. பின்னர் கல்முனை ஆர்.கே.எம் சந்தி கல்முனை தரவை பிள்ளையார் முன்றல் உள்ளிட்ட காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் பகுதியிலும் தேர்தல் பிரச்சாரத்தின் போது இவ்வாறு அழுத்தங்கள் தொடர்ந்ததுடன் பாதுகாப்பு தரப்பினரால் தீவிரமாக கண்காணிப்பிற்கு உள்ளானார்.

## நாட்டு மக்கள் வீழ்ந்துள்ள இடத்திலிருந்து

தோல்வியடைவார் என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ரணிலும் அநுரவும் சிறந்த அரசியல் டீல் ஒன்றை செய்திருக்கின்றார். அவர்களுடைய டீல் தொடர்பில் தனக்கு பிரச்சினை இல்லை. எனக்கு 220 இலட்சம் மக்களுடனே டீல் இருக்கின்றது. இந்த மக்கள் வீழ்ந்துள்ள இடத்திலிருந்து மீட்டெடுப்பதே தமது எதிர்பார்ப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு ஜனாதிபதி அவரின் நெருங்கியவர்களுக்கும், அவரின் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் அதிக சலுகை வழங்குவது அவருடைய பழக்கமாகும். மிகப்பெரிய செல்வந்தர்களே அவருடைய வகுப்பினராகும். அதனால் தான் ஐஆூஊ வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய கடனை மறுசீரமைக்கின்ற போது தொழிலாளர் வர்க்க மக்களின் மீது சுமையை அதிகரிக்கின்றார். சோசலிசம் குறித்து கதைக்கின்ற அநுகுமார ரணில் விக்ரமசிங்க உடன் டீல் செய்திருக்கின்றார். இவர்கள் நாட்டை கட்டியெழுப்பாமல் அவர்களின் முன்னேற்றத்திற்காகவே டீல் செய்திருக்கின்றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த முறை 69 இலட்சத்தை வழங்கி தவறிழைத்துக் கொண்டமையால் மீண்டும் ஒரு முறை பொய் பிரச்சாரங்களை நம்பி ஏமாற வேண்டாம். ரணிலும் அநுரவும் ஒன்றாக இணைந்து கொண்டு மக்களை ஏமாற்றுகின்ற சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

நாட்டிற்கொன்றை காட்டிக் கொண்டு கீழால் இருவரும் டீல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் ஜனாதிபதி பிரதமர் பதவிகளை பிரித்து கொண்டு இருக்கின்றார்களா என்கின்ற சந்தேகமும் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த 43 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் செப்டம்பர் 10 ஆம் திகதி புத்தளத்தில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். 269 000 சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்கள், தொழில் நிலையங்கள் மூடப்பட்டிருப்பதினால் இந்த மக்களை மீட்டெடுக்க வேண்டும். அத்தோடு ஒரு மில்லியன் புதிய தொழில் முனைவர்களை உருவாக்குவோம். நாடளாவிய ரீதியில் பாரிய கல்விப் புரட்சி ஒன்றையும் ஏற்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

QR code முறையை மையமாகக் கொண்டு மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும், முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கும், எரிபொருள் நிவாரணங்களை வழங்குவோம். அத்தோடு மீனவர்களுக்கான உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கும் சலுகைகளை வழங்குவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பொறுப்புக் கூற வேண்டிய தீவிரவாதிகளுக்கும், மிலேச்சத்தனமான சூத்திரதாரிகளுக்கும் சட்டத்தின் முன் நிறுத்தி வழங்கப்பட வேண்டிய அதிகபட்ச தண்டனையை வழங்குவோம்.

தற்போதுள்ள பதில் ஜனாதிபதியும் நியாயத்தை நிலை நாட்டுவதாக கூறினாலும், கோட்டாபயவும் ரணிலும் உண்மையை மறைத்திருக்கின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்திக்கு எவருடனும் டீல்கள் இல்லாமையால் இந்த உண்மையை வெளிப்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச என்பவர் பணத்திற்காகவும், பதவிகளுக்காகவும், வரங்களுக்காகவும் விலை போகின்றவர் அல்ல. 220 இலட்சம் மக்களின் நம்பிக்கையை வென்றவராக ஆத்ம கௌரவத்தை பாதுகாத்து செயல்படுகின்ற ஒருவராவார். எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்புலத்தை ஆராய்ந்து அதனை வெளிப்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்த சந்தர்ப்பத்தில் வாக்குறுதியளித்தார்.

## யாழில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு

தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கு நாம் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் மிகப் பிரம்மாண்டமான கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இருப்பினும் அம்பாறையில் தமிழ் பிரதேசங்களில் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் எனத் தீர்மானித்து கல்முனை மற்றும் திருக்கோவில் பிரதேசங்களில் இரு வேறு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

நாட்டு மக்கள் மிகுந்த துயரத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முன்வந்தார். அதற்கு செலுத்தும் நன்றிக்கடனாக நாம் மீண்டும் மக்கள் ஆணையை அவருக்கு வழங்க வேண்டும். அம்பாறை தமிழ் மக்கள் நிச்சயம் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வழங்கப்படும்.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு அம்பாறையின் அபிவிருத்தியில் மக்கள் பங்காளர்களாக வேண்டும். வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள உள்ளக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கின்றார். விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதோடு, அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றார்.

குறிப்பாக காணி சீர்திருத்த சட்டம் கூட அவரால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. எமக்கு தனிப்பட்ட அரசியல் நோக்கம் கிடையாது. பல்வேறு பொது பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

எனவே யாழ்ப்பாணத்தில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்லப் போகின்றோமா அல்லது அனைவரும் இணைந்து கிழக்கு மாகாணத்துக்கான அதிகாரத்தையும், அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறைக்கு தமிழ் அமைச்சரொருவரையும் பெற்றுக் கொள்ளப் போகின்றோமா? எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்று தீர்மானிக்க முடியாமல் வடக்கில் பிளவடைந்து காணப்படுபவர்களின் தீர்மானங்கள் பயனற்றவை என்றார்.

# சோசலிசம் குறித்து கதைக்கின்ற அநுர- ரணிலோடு பெரிய டீல் செய்திருக்கிறார்

## ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளை பங்கு போட்டிருக்கின்றார்களா என்றும் சந்தேகம்



தற்போதைய ஜனாதிபதி பொருளாதாரத்தை சுருக்கி மக்களின் மீது சுமையை அதிகரித்து மக்களை அழுத்தத்திற்கு உட்படுத்துகின்ற கொள்கை திட்டமொன்றை பின்பற்றுகின்றார். அத்தோடு தன்னை தோல்வியடையச் செய்து அநுரகுமாரவை வெற்றியடைய செய்வதற்கு அநுரகுமார திசாநாயக்க உடன் வித்தியாசமான கூட்டமைப்பு ஒன்றையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளார். எனவே ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைவார் என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ரணிலும் அநுரவும் சிறந்த அரசியல் டீல் ஒன்றை செய்திருக்கின்றார். அவர்களுடைய டீல் தொடர்பில் தனக்கு பிரச்சினை இல்லை. எனக்கு 220 இலட்சம் மக்களுடனே டீல் இருக்கின்றது. இந்த மக்களை வீழ்ந்துள்ள இடத்திலிருந்து மீட்டெடுப்பதே தமது எதிர்பார்ப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு ஜனாதிபதி அவரின் நெருங்கியவர்களுக்கும், அவரின் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் அதிக சலுகை வழங்குவது அவருடைய பழக்கமாகும். மிகப்பெரிய செல்வந்தர்களே அவருடைய வகுப்பினராகும். அதனால் தான் ஐஜூஊ வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய கடனை மறுசீரமைக்கின்ற போது தொழிலாளர் வர்க்க மக்களின் மீது சுமையை அதிகரிக்கின்றார். சோசலிசம் குறித்து கதைக்கின்ற அநுரகுமார ரணில் விக்ரமசிங்க உடன் டீல் செய்திருக்கின்றார். இவர்கள் நாட்டை கட்டியெழுப்பாமல் அவர்களின் முன்னேற்றத்திற்காகவே டீல் செய்திருக்கின்றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த முறை 69 இலட்சத்தை வழங்கி தவறிழைத்துக் கொண்டமையால் மீண்டும் ஒரு முறை பொய் பிரச்சாரங்களை நம்பி ஏமாற வேண்டாம். ரணிலும் அநுரவும் ஒன்றாக இணைந்து கொண்டு மக்களை ஏமாற்றுகின்ற சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். நாட்டிற்கொன்றை காட்டிக் கொண்டு கீழால் இருவரும் டீல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் ஜனாதிபதி பிரதமர் பதவிகளை பிரித்து கொண்டு இருக்கின்றார்களா என்கின்ற சந்தேகமும் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த 43 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் செப்டம்பர் 10 ஆம் திகதி புத்தளத்தில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க தகவல்களின் அடிப்படையில் 269 000 சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்கள், தொழில் நிலையங்கள் மூடப்பட்டிருப்பதினால் இந்த மக்களை மீட்டெடுக்க வேண்டும். அத்தோடு ஒரு மில்லியன் புதிய தொழில் முனைவர்களை உருவாக்குவோம். நாடளாவிய ரீதியில் பாரிய கல்விப் புரட்சி ஒன்றையும் ஏற்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

QR code முறையை மையமாகக் கொண்டு மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும், முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கும், எரிபொருள் நிவாரணங்களை வழங்குவோம். அத்தோடு மீனவர்களுக்கான உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கும் சலுகைகளை வழங்குவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு அதிகபட்சத் தண்டனை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பொறுப்புக் கூற வேண்டிய தீவிரவாதிகளுக்கும், மிலேச்சத்தனமான சூத்திரதாரிகளுக்கும் சட்டத்தின் முன் நிறுத்தி வழங்கப்பட வேண்டிய அதிகபட்ச தண்டனையை வழங்குவோம். தற்போதுள்ள பதில் ஜனாதிபதியும் நியாயத்தை நிலை நாட்டுவதாக கூறினாலும், கோட்டாபயவும் ரணிலும் உண்மையை மறைத்திருக்கின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்திக்கு எவருடனும் டீல்கள் இல்லாமையால் இந்த உண்மையை வெளிப்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச என்பவர் பணத்திற்காகவும், பதவிகளுக்காகவும், வரங்களுக்காகவும் விலை போகின்றவர் அல்ல. 220 இலட்சம் மக்களின் நம்பிக்கையை வென்றவராக ஆத்ம கௌரவத்தை பாதுகாத்து செயல்படுகின்றவராவார். எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்புலத்தை ஆராய்ந்து அதனை வெளிப்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்த சந்தர்ப்பத்தில் வாக்குறுதியளித்தார்.

## மட்டக்களப்பில் தற்கொலை அதிகரிப்பு; உலகளாவிய தற்கோலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வில் தேரிவிப்பு!!






எஸ்.எஸ்.அமிர்தகழியான்

சர்வதேச தற்கொலை தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் அரச மற்றும் அரசசார்பற்ற பிரதி நிதிகளுடன் வருங்காலத்தில் தற்கொலைகளை தடுப்பதற்கான கலந்துரையாடல் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன் தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் (10) திகதி இடம் பெற்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் தரவின் அடிப்படையில் இளம் பராயத்தினரின் மத்தியில் தற்கொலை அதிகரித்து வரும் நிலையில் இதனை தடுப்பதற்கான விழிப்புணர்வு செயல்திட்டம் மட்டக்களப்பில் இடம் பெற்றது. கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 170 தற்கொலை மரணங்களும் இவ்வருட கால் ஆண்டில் 70 தற்கொலை மரணங்களும் இடம்பெற்றுள்ளது. இளம் பராயத்தினரின் தற்கொலை மரணத்தை தடுப்பதற்கான முற்தடுப்பு கலந்துரையாடல் துறைசார் நிபுணர்களுடன் இடம் பெற்றதுடன் எதிர்காலத்தில் தற்கொலை முற்தடுப்பு நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலையில் இடைவிலகல், குடும்ப பிரச்சினைகள், பொருளாதாரப் போராட்டங்கள், போதைப்பொருள் பாவனை, துஷ்பிரயோகம், மன அழுத்தம் இது போன்ற பல காரணிகள் தற்கொலைக்கான காரணிகளா அமைவதாக இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

பாடசாலை மட்டத்தில் இருந்து விழிப்புணர்வு தெளிவூட்டல் மூலம் மாணவர்களை அனுமை மிக்கவர்களாக மாற்ற முடியும் என இதன் போது கருத்துரை வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்ட விவசாயக் குழு கூட்டம்- 2024





எஸ்.எஸ்.அமிர்தகழியான்

மட்டக்களப்பு மாவட்ட விவசாயக் குழு கூட்டம் மாவட்ட மேலதிகஅரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த்தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் (10) திகதி இடம் பெற்றது.

விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட இம்மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்படவுள்ள விவசாய செயற்பாடுகள் தொடர்பாகவும், பெரும்போக விவசாயத்திற்கு தேவையான உள்ளீடுகள், நீர்வழங்கல், காப்பீடு, வங்கி கடன் வழங்கள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

2024ம் ஆண்டிற்கான பெரும்போக பயிர்ச் செய்கைக்கான கால அட்டவணையை தயாரித்தல் தொடர்பாக நிபுணர்களுடன் இணைந்து பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் வடகிழக்கு பருவ பெயர்ச்சி கால நிலை ஆரம்பிப்பதற்கு முன் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான உள்ளீடுகளையும் பெற்றுத்தருமாறு விவசாயிகள் இதன்போது கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி.நவருபரஞ்ஜினி முகுந்தன், மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்கள், கமநல சேவைகள் பிரதி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள், விவசாய மற்றும் கால்நடை அமைப்புக்களின் குழுத்தலைவர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## தகுதி தராதரம் பாராது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிக்கு உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுப்போம்





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று (11) காலை கொழும்பு பேராயர் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்புக்குதாம் தோள் கொடுப்பதாகவும், நீதிமன்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், இதற்காக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

அவ்வாறே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, இதன் பிரதான சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

## தேர்தல் நடவடிக்கைகளுக்கு சிறுவர்களை பயன்படுத்த வேண்டாம்

தேர்தல் பிரச்சாரத்திற்கு குழந்தைகளை பயன்படுத்துவது தொடர்பான வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் சமீபகாலமாக பரவி வருகிறது.

இது தொடர்பில் 'சுரகிமு தருவன்' தேசிய இயக்கம் (11) தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளது.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கைகளுக்கு சிறுவர்களை பயன்படுத்த வேண்டாம் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளது.

## பார் லைசன்ஸ் விற்ற பணத்தை வைத்துக்கொண்டு

# மக்களை பிழையாக வழி நடத்துபவர்கள் அமைச்சராக வர கனவு காண்கிறார்கள்

**நூருல் ஹுதா உமர்**

மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றுக் ஹராமான முறையில் பணம் சம்பாதிக்கிறார்கள். ஒரு தொழிலாளி கடலுக்கு சென்று உழைப்பதற்கு எப்படி கஷ்டப்படுகிறான். அதுபோல ஒரு சாரணை நெய்து எடுப்பதற்கு நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். இப்படி இருக்கின்ற நேரத்தில் ஒரு பேப்பரில் ஒப்பம் வைத்துக் கொடுத்தால் ஒரு பார் லைசனுக்கு 5 கோடி, ஒரு வெளிநாட்டுக்காரன் வந்தால் அவனை கூட்டிக்கொண்டு 100-500 ஏக்கர் காணி அமைச்சில் எடுத்துக் கொடுத்தால் அதில் வரும் ஒரு கமிஷன். ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சம் கமிஷன் என்றால் 500 ஏக்கருக்கு எவ்வளவு வரும். இந்த ஊழல் வெளியே வந்தால் ஜனாதிபதி ரணிலுக்கு தான் அவமானம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

மருதமுனையில் நடைபெற்ற வெல்லும் சஜித் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புதிதாக அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக வந்தவரின் கையில் நல்ல காசு உள்ளது. ஒரு பிரமுகர் மேடையில் பேச ஒரு பேச்சுக்கு 25,000/- வழங்கவும் தயாராக இருக்கிறார்கள். இப்படியான ஊழலை பார்த்தால் யாருக்குத்தான் ஆத்திரம் வராமல் இருக்கும். பொத்துவில் மண்ணில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வந்த பிரச்சார கூட்டத்திற்கு மருதமுனையில் இருந்தும் 15 பஸ்களில் ஆட்களை அழைத்து சென்றார்கள். அவர்கள் யாரும் சும்மா செல்லவில்லை. ஒவ்வொரு ஆளுக்கும் தலைக்கு 5000 ரூபாய் கொடுத்து இருக்கிறார். இது இலகுவான விடயம் அல்ல. பல்வேறு இடங்களில் இருந்தும் கிட்டத்தட்ட 120 பஸ்கள் பொத்துவிலுக்கு அன்றைய தினம்



இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ள ஆட்களை ஏற்றிச் சென்று இருக்கின்றன. கணக்கு பாருங்கள். ஒரு பஸ்ஸில் 40-50 பேர் சென்றால் ஒருவருக்கு 5000 ரூபாய் படி மக்களுக்கு காசு, பஸ்ஸுக்கு காசு. கிட்டத்தட்ட 120 பஸ்ஸுக்கு 4 கோடி 20 இலட்சம். அப்படியானால் இந்த பணம் அவருக்கு எங்கிருந்து வந்தது.

யார் யார் களவெடுத்திருக்கிறார்கள் அல்லது யார் யார் களவெடுக்க இல்லை என்று சிங்கள இளைஞர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதனாலயே ஜனாதிபதி ரணில் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியையாக இருக்கும் ரணிலின் மனைவி மைத்திரி விக்ரமசிங்க ஆகியோருக்கு திட்டக்கூடாது என்று பல்கலைக்கழக மாணவர்கள், சிங்கள இளைஞர்கள் தெளிவாக இருக்கிறார்கள். ஜனாதிபதி ரணில் நாட்டை எப்படி கொண்டு முன்னேற்றகரமான கொண்டுவந்தாலும் அவருடன் சுற்றி இருப்பவர்கள் கூடாது என்பதுதான் இப்போது நாட்டில் உள்ள தெளிவு. பெட்ரோல் வரிசையில் இறந்த மக்களும் இருக்கிறார்கள். அப்போது நாட்டை பற்றி சிந்திக்காமல் உடனடி கொள்வனவு திட்டத்தின் கீழ் ஒரு கப்பலில் 1200 கோடி லாபம் எடுத்தவனும் அரசில் அமைச்சராக இருக்கிறார்கள். ஒரு லட்சம் தொன் பெட்ரோல் வேண்டுமென்றால் ஒரு தொலைபேசி அழைப்பில் எடுப்பார்கள். அவர்கள் கூறும் விலை தான் கொள்வனவு விலையாக இருந்தது. அந்த காலத்தில் அவசர நிலைமை காரணமாக கேள்வி மனுக்கள் இருக்கவில்லை. மற்ற அமைச்சர்கள், ஆளும் கட்சிக்காரர்கள் உழைப்பதை கண்டு நமது பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு ஆசை. நாமும் அமைச்சராக வேண்டும், உழைக்க வேண்டும் என்று. இப்போது ரணிலை ஜனாதிபதியாக உருவாக்க துடிக்கிறார்கள். நாங்கள் அமைச்சர்களாக இருந்த எங்கள் காலத்தில் பதவிகளை அமானிதமாக பார்த்தோம். நாங்கள் எதிர்பார்க்கும் ஊழலில்லா இலங்கை உருவாகி எதிர் வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்று ஊழலை ஒழிக்கும் போது உருவாகும் என்றார்.

---

## மட்டக்களப்பில் தற்கொலை அதிகரிப்பு;

# உலகளாவிய தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வில் தெரிவிப்பு!!





**எஸ்.எஸ்.அமிர்தகழியான்**

சர்வதேச தற்கொலை தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் அரச மற்றும் அரச சார்பற்ற பிரதி நிதிகளுடன் வருங்காலத்தில் தற்கொலைகளை தடுப்பதற்கான கலந்துரையாடல் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆர். முரளிஸ்வரன் தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் (10) திகதி இடம் பெற்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் தரவின் அடிப்படையில் இளம் பராயத்தினரின் மத்தியில் தற்கொலை அதிகரித்து வரும் நிலையில் இதனை தடுப்பதற்கான விழிப்புணர்வு செயல்திட்டம் மட்டக்களப்பில் இடம் பெற்றது. கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 170 தற்கொலை மரணங்களும் இவ் வருட கால் ஆண்டில் 70 தற்கொலை மரணங்களும் இடம் பெற்றுள்ளது.

இளம் பராயத்தினரின் தற்கொலை மரணத்தை தடுப்பதற்கான முற்தடுப்பு கலந்துரையாடல் துறைசார் நிபுணர்களுடன் இடம் பெற்றதுடன் எதிர் காலத்தில் தற்கொலை முற்தடுப்பு நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலையில் இடை விலகல், குடும்ப பிரச்சினைகள், பொருளாதாரப் போராட்டங்கள், போதைப்பொருள் பாவனை, துஷ்பிரயோகம், மன அழுத்தம் இது போன்ற பல காரணிகள் தற்கொலைக்கான காரணிகளா அமைவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலை மட்டத்தில் இருந்து விழிப்புணர்வு தெளிவூட்டல் மூலம் மாணவர்களை அளுமை மிக்கவர்களாக மாற்ற முடியும் என இதன் போது கருத்துரை வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் புதிய கட்டிடத்தொகுதியில் சூரிய மின் சக்தி கருத்திட்டம் கல்லூா அதிபர் பழைய மாணவிகளால் அங்குரார்ப்பணம்

**(எஸ்.எம்.எம்.றம்ஸான்)**

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி வரலாற்றில் மற்றொரு மைல்கல்லை அடைந்திருப்பது உண்மையில் மிகவும் பெருமைக்குரிய விடயமாக இருக்கிறது. பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கத்தில் சூரிய மின் சக்தி திட்டம் கல்லூா“ அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸிடம் கையளிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.




பழைய மாணவிகள் சங்கத்தின் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளை முழு பாடசாலை சமூகமும் பாராட்டுவதுடன் இது சூழல் நட்பு மிக்க நிலைபேறான அபிவிருத்தி கருதுகோள்களை உருவாக்குவதை நோக்கி முன்னெடுப்பாகும்.

இந் நிகழ்வில் பழைய மாணவிகள் சங்கத்தின் உப தலைவி பெரோஸா முசம்மில் மற்றும் பழைய மாணவிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள்,பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி உறுப்பினர்கள் மாணவத் தலைவிகளும் கலந்து சிறப்பித்தனர்.

---

# சித்திரத்தேர் வடித்த அஜந்தனுக்கு ‘சிற்பக் கலையரசன்’ விருது;

## தேர் அன்பளித்த பிரபாகர குருக்களுக்கு ‘விநாயக பக்தி கிரியாசாகரர்’ விருது!

காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்திற்கான சித்திரத்தேரை வடித்த சிற்பாச்சாரி அஜந்தனுக்கு “சிற்பக் கலையரசன்” விருதும் குறித்த


தேரை அன்பளித்த மகோற்சவ குரு சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்களுக்கு “விநாயக பக்தி கிரியாசாகரர்” விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.



காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாகவரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் கன்னித் தேரோட்டம் கடந்த (7) சனிக்கிழமை பகல் 12 மணியளவில் விநாயகர் சதுர்த்தியன்று ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றமை தெரிந்ததே.

இதுவே காரைதீவு வரலாற்றில் முதலாவது சித்திரத்தேர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் முதல் தடவையாக 39 லட்சரூபாவில் 21 அடி உயர பாரிய சித்திரத்தேர் ஒன்று ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்த அமரர் சண்முக ரெத்தினம் குருக்கள் குடும்பத்தை நன்றி கூறும் கௌரவிக்கும் நிகழ்வு ஆலயத் தலைவர் இ.தவராசா தலைமையில் ஆலயசந்தானத்துபிரதிநிதி விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.




அதன் போது இத்தேரை குடும்பம் சார்பாக கையளித்த மஹோற்சவ குருவான சுவிட்சர்லாந்து தூண் ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலய பிரதம குரு கிரியாதிலகம் சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார் .‘விநாயக பக்தி கிரியாசாகரர்’ என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வாழ்த்துப்பாவை வி.ரி.சகாதேவராஜா வாசித்து பரிபாலன சபையினர் கையளித்தனர்.

இவ் ஆலயத்தின் முன்னாள் பிரதம குரு யாழ்ப்பாணம் கோப்பாய் இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலய ஆதீனகர்த்தா அமரர் சிவஸ்ரீ இரத்தினசபாபதி சண்முகரெத்தினம் குருக்கள் வடிவாம்பிகை குடும்பம் சார்பாக இந்த அற்புதமான ஆன்மீக அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது . அமரர் சிவஸ்ரீ சண்முகரெத்தினம் குருக்கள் இவ்வாலயத்தில் பல வருட காலம் பிரதம குருக்களாக இருந்து நிறைந்த சேவையாற்றியவர். அவரது சிரேஸ்ட புதல்வர் வடக்கு கிழக்கில் மிகவும் பிரபலமான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தற்போது இவ் ஆலயத்தின் பிரதம குருவாக இருக்கிறார். அவர் தற்சமயம் கனடாவில் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தில் பிரதம குருவாக செயற்படுகிறார். அக்டோபர் 1 இல் நாடு திரும்புவார்.



அதேசமயம் இந்த சித்திரத்தேரை வடிவமைத்த யாழ்ப்பாணம் கைதடி தச்சன்தோப்பைச் சேர்ந்த சிற்பாச்சாரி சுப்பிரமணியம் அஜந்தனுக்கு “சிற்பக்கலையரசன்” என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. குருக்கள்தர்மகர்த்தா க.சுபரெத்தினம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

குடும்பத்தினர் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**

# பேசுவோம் போரிடுவோம் படைத்த க.வே.பாலகுமாரன்

## ஈழப் புரட்சிக்காக ஆகுதியாகிய தர்க்கீகவாதி!!



**(நறுங் குறுந்தாடிக்கு சொந்தக்காரனான தோழர் வே.பாலகுமார் புன்முறுவல் என்றும் பூத்தவரும், நேரிய பார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர்.**
**ஈழப் புரட்சிக்காக தன்னையே ஆகுதியாக்கிய தர்க்கீகவாதி க.வே.பாலகுமாரனின் 77 வது பிறந்த நாள் (15 - 09 - 1947) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)**




புன்முறுவல் என்றும் பூத்த குறுந்தாடிக்கு சொந்தக்காரனான தோழர் வே.பாலகுமார் நேரியபார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர். தமிழர் தேசம் திட்டமிட்ட இனவழிப்பை எதிர் கொண்டு அதற்கெதிராக போராட வேண்டிய வரலாற்றை நோக்கிப் பயணித்த காலத்தில் தன்னெழுச்சியாக தன் தலைமையில் ஒரு விடுதலை இயக்கம் கட்டி போராட எழுந்தவர் க. வே. பாலகுமாரன் அவர்கள்.

இன விடுதலைக் கனவைச் சுமந்து இன்னமும் நிற்கும் தமிழரின் போராட்ட வாழ்வியலை பேசுவோம் போரிடுவோம் எனும் புத்தகத்தின் ஒவ்வொரு கட்டுரையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று ஆவணச் சாட்சியங்களாக விளங்குகின்றன.

தமிழ் தேசத்தின் விடுதலைக் கனவைச் சுமந்து நிற்கும் ஈழத்தின் தொன்மையான வரலாற்றில் தமிழ்த் தேசிய இனம் தமக்கான தேசத்தில் தம்மைத் தாமே ஆளும் அரசாட்சி கொண்ட தேசமாக பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த வரலாற்றை பாலகுமாரன் தெளிவாக இந்நூலில் வெளிப்படுத்தி உள்ளார்.

பிற்கால வரலாற்றில் சிங்கள இனமும் இத்தேசத்தில் எவ்வாறு வந்து சேர்ந்தார்கள் என்பதை வரலாற்று ரீதியாக நிறுவப்பட்ட சான்றுகளை ஆதாரபூர்வமாக க.வே.பாலகுமாரனின் பேசுவோம் போரிடுவோம் நூல் உறுதிப்படுத்தி உள்ளார்.




இந்நூல் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் பல்வேறு காலக்கட்ட நிகழ்வுகளை நமது கண் முன்னே நிறுத்துகிறது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் புரட்சியாளராகப் பங்கெடுத்துக்கொண்ட க.வே.பாலகுமாரன் வரலாறு மற்றும் அரசியலில் தாம் பெற்ற பட்டறிவுகளை நேர்த்தியான வடிவில் அனைத்துலக அரசியல் நகர்வுகளோடு இணைத்து எழுதுவதில் புலமைப்பெற்றவர்.

அரசியல் தளம் மட்டுமின்றி தமிழரின் அறிவியல், சங்க இலக்கியம், தொல்லியல் என பல்துறை ஆளுமையோடு கட்டுரைகளை எழுதுபவர். ஈழ போராட்டத்தில் உன்னத புரட்சியாளரான

தோழர் க. வே. பாலகுமாரன் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். இவர் விடுதலைப் புலிகளுக்கு ஒரு அரசியல் மதியுரைஞராக செயற்பட்டார்.


புலிகளுடன் இணையும் முன்னர் இவர் ஈழ புரட்சி அமைப்பின் செயலதிபராக இருந்தார். பின் ஈரோஸ் அமைப்பு விடுதலைப் புலிகளுடன் 1990களின் இறுதியில் சுயமாக இணைந்ததும் அறிந்ததே.


தமிழர் விடுதலைக் களத்தில் போரிடுவதோடு மட்டுமின்றி, தமிழீழ மக்களின் அரசியல் தெளிவிற்காக, பல்வேறு காலக்கட்டங்களில் ஆழ்ந்த அரசியல் நுண்ணறிவை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கட்டுரைகளை எழுதி அரும்பணியாற்றியவர் க.வே. பாலகுமாரன் அவர்கள்.

காலத்தின் தேவை கருதி தன்னை களத்தில் இணைத்துக்கொண்டு இறுதிவரை தளத்தில் நின்று தோள் நின்ற ஆய்வாளருமான திரு. க. வே பாலகுமாரன் அவர்களது ஆக்கங்களின் தொகுப்பான பேசுவோம் போரிடுவோம் என்ற நூல் வெளியீடு ஐரோப்பாவில் பல நாடுகளில் நிகழ்ந்தது.

க.வே.பாலகுமாரனின் 'பேசுவோம் போரிடுவோம்' நூல் விடுதலைப் போராட்ட வரலாற்றின் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துகிறது.

க.வே.பாலகுமாரன் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழீழ அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு ''பேசுவோம் போரிடுவோம்'' என்ற தலைப்பில் வெளியாகி உள்ள இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டுரையும் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று ஆவண சாட்சியப்பதிவுகளாக விளங்குகின்றன.




### பாலகுமாரன் - புரட்சியின் ஒளிர்முகம்:

பொதுவுடமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பாலகுமார் புன்முறுவல் என்றும் பூத்த குறுந்தாடிக்கு சொந்தக்காரனாக, நேரியபார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர்.

தமிழ் தேசிய விடுதலைப் பாதையில் நிதர்சனமாய் பாலகுமார் தன்னை இளம் பராயத்திலிருந்தே இணைத்துக் கொண்டவர். ஈழப் போராட்ட நான்கு தசாப்தங்களாக தனிமனித வரட்டுவாத பிரச்சாரங்களை தவிர்த்து, மக்களுடன் மக்களாய் போராட்ட களத்தில் தன்னை தியாகித்தவர். தமிழ் தேசியத்திற்காய் தோள்நின்று தியாகித்த யதார்த்தவாதியே தோழர் பாலகுமாரன்.

தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பரந்துபட்ட மக்கள் போராட்டமாகவும் அதேவேளையில் சமூக நீதிக்கான போராட்டமாகவும் அமைய வேண்டும் என்பதில் நம்பிக்கை என்றும் கொண்டவர். அவர் ஈழப்புரட்சிக்காய் தன்வாழ்வையே ஆகுதியாகிய தர்க்கீகவாதி ஆவார்.

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்:

முள்ளிவாய்க்கால் போர் மௌனிப்பின் பின்னர் 2009இல் தனது மகன் சூரியதீபனுடன் விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக முதலில் தகவல்கள் வெளியானதன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட போராளிகளில் பாலகுமாரும் ஒருவர்.


ஆனாலும் தோழர் பாலகுமார் எங்கு கொண்டு செல்லப்பட்டார், எந்த இரகசிய சித்திரவதை முகாமில் மறைத்து வைக்கப்பட்டார் என்கிற தகவல்கள் எதுவும் பின்னாளில் வெளிவரவில்லை.

2009இல் அன்றைய சிங்கள அரசின் புனர்வாழ்வு அமைச்சரோ, பாலகுமார் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டார் என்றும், அவர் அரச படைகளிடம் சரணடையவில்லை என்றும் அப்பட்டமான பொய்யை சொன்னார். முள்ளிவாய்க்காலில் உச்சகட்ட இன அழிப்புப்போர் நடந்து முடிந்து பல ஆண்டுகள் ஆனாலும் இன்னும் நீதியின் கண்கள் திறக்குமா என்று ஏக்கத்தோடு காத்திருக்கும் எண்ணற்ற ஈழ மக்களில் அவரும் ஒருவர்.

உலகத்தின் மனசாட்சியை உலுப்பி, மௌனித்த முள்ளிவாய்க்கால் போரின் இறுதியில், தமிழ் மக்களில் உள்ள ஏக்கமெல்லாம் மண்ணை மீட்க தம்மைத் தொலைத்துக் கொண்ட பாலகுமாரும் சரணடைந்த மற்றய போராளிகளும் எப்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள் என்பதுதான்.

உலகப் புரட்சியாளர் வரிசையில் தோழர் பாலகுமாரனும் தனித்துவமாக என்றும் பிரகாசிக்கின்றார். மௌனிக்கப்பட்ட போராட்டத்தின் இறுதிக் கணங்களில் தோழர் பாலகுமார் மாயமானது உலகின் மனச்சாட்சியையே உலுப்பியுள்ளது.

அவருடன் தேச விடியலுக்காய் பயணித்த தோழர்களும், மக்களும் தோழர் வே.பாலகுமாரை ஒருபோதும் மறவர். இன்றல்ல, என்றாவது ஓர் நாளினில் வரலாறு அவரை விடுதலை செய்யும் என்ற நம்பிக்கைகளுடன் ஈழவர் காத்திருக்கின்றனர்.



# ஜனாதிபதித் தேர்தல் 2024



மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்

077 664 5232 / 077 311 2601